# மயிலாடுதுறை நகராட்சி

**2019—ம் ஆண்டு நவம்பர் மாதம் 21—ஆம் தேதி வியாழக்கிழமை**
**மாலை 3.30 மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.**
**முன்னிலை:— திரு. சோ. புவனேஸ்வரன் (எ) அண்ணாமலை.,**
**தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையர்**
**மயிலாடுதுறை நகராட்சி**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| **21.11.2019** | **1.** மயிலாடுதுறை நகராட்சி ஆணையரின் **2019—ம் ஆண்டு** நவம்பர் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.652**<br>பதிவு செய்யப்பட்டது |
| **21.11.2019** | **2.** மயிலாடுதுறை நகராட்சி பொறியாளர் **2019—ம் ஆண்டு நவம்பர்** மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.653**<br>பதிவு செய்யப்பட்டது |
| **21.11.2019** | **3.** மயிலாடுதுறை நகராட்சி நகர்நல அலுவலர் **2019—ம் ஆண்டு** நவம்பர் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.654**<br>பதிவு செய்யப்பட்டது |
| **21.11.2019** | **4)** அரசாணை எண் (Ms) 150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA-IV) துறை, நாள்:19.11.2019ன்படியும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை—28 அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்:20.11.2019ல் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படியும், அரசாணை எண். 76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்:26.07.2018ன்படி 01.04.2018ம் தேதி முதல் சொத்துவரி பொது சீராய்வு (Revision of Property tax) மூலம் உயர்த்தப்பட்ட சொத்துவரி உயர்வினையும், சொத்து வரிவிதிப்பிற்கான மண்டல மதிப்பீடு (Zone Rates) 01.04.2018 முதல் உயர்த்தப்பட்டதையும் மற்றும் 01.10.2017ம் தேதி முதல் சொத்துவரி மறு சீரமைப்பு (remeasurement) செய்து உயர்த்தப்பட்டதையும், நிறுத்தி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ள விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு: 1. மன்றம் அரசாணையினை பார்வையிட்டு பதிவு செய்யலாம்,<br>2. மன்றம் அனுதிக்கலாம்.<br>ந.க.எண்.5101/2019/அ1 | **தீர்மானம் எண். 655**<br>பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| **21.11.2019** | **5)** மயிலாடுதுறை நகராட்சியில் அலுவலகப்பணி நிமித்தமாக வெளியூர் சென்று வரும் பணியாளர்களுக்கு பயணப்படி பணிமாறுதல் பயணப்படி 2019–2020–ஆம் ஆண்டிற்கு வழங்கவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண். 230/2017/பி2 | **தீர்மானம் எண். 656**<br><br>**அனுமதிக்கப்பட்டது** |
| **21.11.2019** | **6)** மயிலாடுதுறை நகராட்சியில் துப்புரவு பணியாளராகப்பணிபுரிந்து வந்த திரு.மா.வேலு, என்பவர் 18.04.2019 அன்று பணி மரணமடைந்தார். அன்னாரின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தாதொகை மற்றும் அதற்குண்டான வட்டித்தொகை ரூ. 6086/– நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண்.2290/2019/பி2 | **தீர்மானம் எண். 657**<br><br>**அனுமதிக்கப்பட்டது** |
| **21.11.2019** | **7)** மயிலாடுதுறை நகராட்சியில் துப்புரவு பணியாளராகப் பணிபுரிந்து வந்த திரு.ரா.சோமு, என்பவர் 04.12.2018 அன்று பணி மரணமடைந்தார். அன்னாரின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தாதொகை மற்றும் அதற்குண்டான வட்டித்தொகை ரூ. 14471/– நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண்.2290/2019/பி2 | **தீர்மானம் எண். 658**<br><br>**அனுமதிக்கப்பட்டது** |
| **21.11.2019** | **8)** இந்நகராட்சி பொதுசுகாதாரம் பிரிவு குப்பை அகற்றும் டிராக்டர் எண்.TN.51 P.3556 – எண்ணுள்ள வாகனத்தின் மின்கலப்பெட்டி பழுதடைந்துள்ளதை மாற்றம் செய்து புதியதாக வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.12500/–த்திற்கு பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>ந.க.எண்.4179/2019/எச்1. | **தீர்மானம் எண். 659**<br><br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| **21.11.2019** | **9)** இந்நகராட்சியின் அலுவலக பயன்பாட்டில் உள்ள இரண்டு எண்ணிக்கை கணிப்பொறிகள் **3** எண்ணிக்கை Laser Jet பிரிண்டர்கள் பழுது ஏற்பட்டுள்ளதால் கணினி தொடர்பான பணிகளை மேற்கொள்ள சிரமநிலை ஏற்பட்டுள்ளதாலும் மேலும் வரிவசூல் தொடர்பான அறிக்கைகள், கோப்புகள், அறிவிப்புகள் வழங்க காலதாமதம் ஏற்படுவதால் மேற்படி கணினி மற்றும் பிரிண்டர்களை உடனடியாக சீர் செய்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.**50000/–** (ஐம்பதாயிரம் ஆகும்) இச்செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: **1.** அனுமதிக்கலாம்.<br><br>**2.** மேற்படி பணியின் அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி உள்ளூர் விலைப்புள்ளி கோருவதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். **5116/2019/**அ**1.** | **தீர்மானம் எண். 660**<br><br>**அலுவலக குறிப்பை ஏற்று அனுமதிக்கப்பட்டது** |
| **21.11.2019** | **10)** மயிலாடுதுறை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டம் **2018–2019**–ன்கீழ் "Purchase of Battery operated vehicle as per specification 18 Nos" பணிக்கு **12.09.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுக்கப்பட்ட Encon Engineers, Coimbatore நிறுவனத்தாருக்கு **18.09.2018** அன்று LOA கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் ஒப்பந்த பத்திரம் கொடுத்து பணி மேற்கொள்ளாததால் ஒப்பந்தப்புள்ளியினை ரத்து செய்திடவும், எனவே மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும் இப்பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.**1634/2018/**இ**1.** | **தீர்மானம் எண். 661**<br><br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| **21.11.2019** | **11)** மயிலாடுதுறை நகராட்சி புதிய அலுவலக கட்டிடத்தின் முதல் தளத்திற்கு, பழைய அலுவலக கட்டிடத்தில் இயங்கி வரும் பொறியியல் பிரிவு, சுகாதார பிரிவு, வருவாய் பிரிவு, கணினி பிரிவு ஆகிய பிரிவுகளை மாற்றம் செய்திட வேண்டியுள்ளதால் பிரிவிற்கு தேவையான Partition, Light facility, Fan facility, Plumping works மற்றும் Weathering course ஆகிய பணிகள் மேற்கொள்ள தேவையான மதிப்பீட்டு தொகை ரூ.25,00,000/- (ரூபாய் இருபத்தி ஐந்து இலட்சம் மட்டும்) ஆகும். இதனை பொது நிதி 2019-20 இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். 5071/2016/இ1 | **தீர்மானம் எண். 662**<br><br>**அனுமதிக்கப்பட்டது** |
| **21.11.2019** | **12)** மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை திட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் 06.11.2019 மற்றும் 07.11.2019 ஆகிய இரு நாட்கள் ஆய்வு மேற்கொண்டு, பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் இயங்கும் அனைத்து கழிவுநீர் உந்து நிலையங்களில் உள்ள Screen well, Grid well மற்றும் அவற்றில் உள்ள Mechanical arrangements அனைத்தும் உடனடியாக பழுதுநீக்கம் செய்து இயக்கத்தில் கொண்டுவர அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே உடனடியாக அப்பழுதுகளை சரிசெய்திட தேவையான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.7,00,000/- (ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சியின் பாதாள சாக்கடை திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.5384 /2019/இ1 | **தீர்மானம் எண். 663**<br><br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| 21.11.2019 | **13)** மயிலாடுதுறை நகராட்சி தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2019–2020ன்கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட 13.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை தனிஅலுவலரின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. | **தீர்மானம் எண். 664**<br>**அலுவலக குறிப்பை ஏற்று அனுமதிக்கப்பட்டது** |

| வ எண் | வேலையின் விபரம் | ஒப்பந்த மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டைவிட குறைவு/ மதிப்பீட்டைவிட அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் |
|---|---|---|---|---|---|
| தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2019–2020 | | | | | |
| 1. | வார்டு எண்.2 திருவிழந்தூர் வடக்கு வீதி & தோப்பு தெரு, வார்டு எண்.3 திருவிழந்தூர் கவரத்தெரு, வார்டு எண்.4 துபாஷ் தெரு, வார்டு எண்.5 ஆனத்தாண்டவபுரம் ரோடு, வார்டு எண்.6 வடக்கு ராமலிங்கம் தெரு வில் தார்சாலை அமைக்கும் பணி. | **117,00,000/-** | **M/s M.S.R. Associates, Mayiladuthurai.** | ரூ.10525340.45 (+) 4.98% அதிகம் | **M/s M.S.R. Associates, Mayiladuthurai.** |
| | | | திரு. L. ராஜேஸ்வரன், மயிலாடுதுறை. | ரூ.10621710.05 (+) 5.94% அதிகம் | |
| 2. | வார்டு எண்.8 மகாதானத் தெரு, பட்டமங்கல தெரு, & அர்பன் பேங்க் ரோடு, வார்டு எண்.9 அவையாம்பாள்புரம், வார்டு எண்.10 வாத்துக்கார தெருவில் தார்சாலை அமைக்கும் பணி. | 1,46,70,000/- | திருமதி.G.சசிராணி, மயிலாடுதுறை | ரூ.13423773.25 (+) 4.94% அதிகம் | திருமதி.G.சசிராணி மயிலாடுதுறை |
| | | | திரு. L. ராஜேஸ்வரன், மயிலாடுதுறை. | ரூ.14069393.25 (+) 9.99% அதிகம் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. | வார்டு எண்.11 ஜங்சன் ரோடு(கிட்டப்பா பள்ளி அருகில்), வார்டு எண்.12 எடத்தெரு, வார்டு எண்.17 பாரதி நகர், & பனந்தோப்புத்தெரு, வார்டு எண்.20 தூக்கணாங்குளம் கீழ்கரை, வார்டு எண்.21, 63வர் பேட்டை ரோடு, வார்டு எண்.23 சாலியத் தெரு, வார்டு எண்.26 பள்ளிவாசல் தெரு, வார்டு எண்.28 பட்டமங்கல ஆராயத் தெரு, வார்டு எண்.29 வெள்ளான் தெருவில் தார்சாலை அமைக்கும் பணி. | 1,33,90,000/- | திரு.S.வீராசாமி, மயிலாடுதுறை. | ரூ.12011217.05 (+) 4.95% அதிகம் | திரு.S.வீராசாமி, மயிலாடுதுறை. |
| | | | திரு.A. சட்டையப்பன், மயிலாடுதுறை. | ரூ.12104939.05 (+) 5.77% அதிகம் | |
| 4. | வார்டு எண்.30 அய்யாரப்பர் தெரு, வார்டு எண்.31 டவுன் ஸ்டேசன் ரோடு, & பெசன்ட் நகர், வார்டு எண்.33 டபீர் தெரு, வார்டு எண்.34 சின்னமாரியம்மன் கோவில் தெரு, வார்டு எண்.36 எஸ்.என்.ஜி நகரில் தார்சாலை அமைக்கும் பணி. | 1,02,40,000/- | திரு.S.வீராசாமி, மயிலாடுதுறை. | ரூ.9232558.05 (+) 4.96% அதிகம் | திரு.S.வீராசாமி, மயிலாடுதுறை. |
| | | | திரு.A. சட்டையப்பன், மயிலாடுதுறை. | ரூ. 9315517.05 (+) 5.90 % அதிகம் | |

<u>அலுவலககுறிப்பு</u>

1. பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு கூடுதலாக கொடுத்துள்ள தொகையினை இந்நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 3587/2019/இ1**

| | | |
|---|---|---|
| | **14)** மயிலாடுதுறை நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள கடை எண்.4 , வ.வி. எண்.97/35–ல் உள்ள குத்தகைதாரர் திரு. N. செல்வராஜ் என்பவர் கடையினை நடத்தி வந்தார். திரு. N. செல்வராஜ் என்பவர் திரு. மணிகண்டராஜ் என்பவருக்கு 15 ஆண்டுகளுக்கு முன்பே ஒப்பந்தம் எழுதி அனுபோக உரிமையை கொடுக்கப்பட்டு உள்ளதால் ந.நி.ம. குடிநீர் வழங்கல் துறை (நநி4) அரசாணை எண்.92/3.07.2007–ன்படி அனுபோகதாரர் ஒரு முறை மட்டும் பெயர்மாற்றம் செய்து கொள்ள அனுமதி அளிக்கப்பட்டு உள்ளதால் மேற்படி அரசாணையின்படி பெயர்மாற்றம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>2. அரசாணை எண்.92 ந.நி.ம. குடிநீர் வழங்கல் துறை (நநி4) நாள், 3.07.2007–ல் குறிப்பிட்டுள்ள அறிவுரையின்படி பெயர்மாற்றம் கட்டணம் 12 மாத முன்பணம் ஆகியவை பெற்றுக் கொண்டு பெயர்மாற்றம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.4853/2019/அ2 | **தீர்மானம் எண். 665** |
| | **15)** மயிலாடுதுறை நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள கடை எண்.3 , வ.வி. எண்.97/34–ல் உள்ள குத்தகைதாரர் திரு. S. கணேசன் என்பவர் கடையினை நடத்தி வந்தார். திரு. S. கணேசன் என்பவர் உடல்நிலை சரியில்லாத காரணத்தாலும் கடையினை நடத்த முடியாத நிலையில் திரு. R. பாஸ்கரன் என்பவருக்கு 2016–ம் ஆண்டு ஒப்பந்தம் எழுதி அனுபோக உரிமையை கொடுக்கப்பட்டு உள்ளதால் ந.நி.ம. குடிநீர் வழங்கல் துறை (நநி4) அரசாணை எண்.92/3.07.2007–ன்படி அனுபோகதாரர் ஒரு முறை மட்டும் பெயர்மாற்றம் செய்து கொள்ள அனுமதி அளிக்கப்பட்டு உள்ளதால் மேற்படி அரசாணையின்படி பெயர்மாற்றம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>2. அரசாணை எண்.92 ந.நி.ம. குடிநீர் வழங்கல் துறை (நநி4) நாள், 3.07.2007–ல் குறிப்பிட்டுள்ள அறிவுரையின்படி பெயர்மாற்றம் கட்டணம் 12 மாத முன்பணம் ஆகியவை பெற்றுக் கொண்டு பெயர்மாற்றம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.4993/2019/அ2 | **தீர்மானம் எண். 666** |

| | | |
|---|---|---|
| | **16)** மயிலாடுதுறை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டம் **2018-2019**ன் கீழ் "Construction of Micro Compost Centre with Capacity of 5 TPD at Thimmanayakkan Padithurai in ward no.7" பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அப்பணியில் வடிவமைப்பிற்கு ஏற்றாற்போல் அடித்தளம் மற்றும் இதர பணிகள் மேற்கொண்ட காரணத்தினால் அம்மதிப்பீட்டில் கொடுக்கப்பட்டுள்ள Belt Conveyor வாங்கிட தொகையில்லாத காரணத்தினாலும், மேற்படி நுண்ணுயிரி உரமாக்கல் பணி மேற்கொண்டிட Belt conveyor arrangement அவசியமாக உள்ள காரணத்தினால், மேற்படி Belt conveyor-னை வாங்க தேவையான மதிப்பீடு தொகை ரூ.**4,30,000/-** (ரூபாய் நான்கு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்). இதனை இந்நகராட்சியின் பொது நிதி **2019-20** இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். 1634/2018/இ1 | **தீர்மானம் எண். 667** |
| | **17)** மயிலாடுதுறை நகராட்சி ஆணையர் குடியிருப்பு நீண்ட நாள்களாக பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படாததால், அக்குடியிருப்பு மிகவும் பழுதடைந்துள்ளது. எனவே மேற்கண்ட குடியிருப்பில் ஆணையர் குடியிருப்பதற்கு ஏதுவாக False ceiling, Fan facility, light facility, Paver block, Entrance grill door, painting etc., போன்ற பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தேவையான மதிப்பீட்டு தொகை ரூ.**5,00,000/–** (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சியின் பொது நிதி **2019–20** இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.5503/2019/இ1. | **தீர்மானம் எண். 668** |
| | **18)** மயிலாடுதுறை நகராட்சியின் எல்லைக்குட்பட்ட நகராட்சி சாலைகளில் ஏற்பட்டுள்ள குண்டு குழிகள், பள்ளங்கள் ஆகியவற்றால் சாலை போக்குரத்திற்கும், வாகன ஓட்டிகள் மற்றும் பொது மக்களுக்கும் சிரம நிலை உண்டாகியுள்ள காரணங்களினால் சேதமடைந்துள்ள சாலைகளை தற்காலிகமாக செப்பணிடும் பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே இப்பணிக்கான உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ. **10,00,000/–** (ரூபாய் பத்து லட்சம் மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சியின் பொது நிதி **2019–20** இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.5407/2019/இ1. | **தீர்மானம் எண். 669** |
| | **19)** நகராட்சிக்கு அலுவலக உபயோகத்திற்கு தேவையான எழுதுப்பொருட்கள், கணினி தொடர்பான பொருட்கள் மற்றும் அலுவலக உபயோக பதிவேடுகள் **2019–2020–**ம் ஆண்டிற்கு தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்ட்கோ சர்வ், தமிழ்நாடு பல்நோக்கு சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிட், திருச்சியில் நேரிடையாக கொள்முதல் செய்யவும், அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.**600000/–**ற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண்.டி2/5812/2018. | **தீர்மானம் எண். 670** |

| | | |
|---|---|---|
| | **20)** மயிலாடுதுறை நகரத்திற்கு பெருமை சேர்க்கும் வரலாற்று சிறப்புமிக்க "துலா உற்சவம் திருவிழா 2019" ஐப்பசி மாதம் 1 ஆம் தேதி முதல் கார்த்திகை மாதம் 1 ஆம் தேதி வரை நடைபெறும். இத்திருவிழா காலகட்டத்தில் காவேரியில் புனித நீராடுவதற்கு அனைத்து பகுதிகளிலிருந்தும் பக்தர்கள் புனித வருகை தருவார்கள். எனவே பொதுமக்களுக்கும் பக்தர்களுக்கும் சுகாதார அடிப்படை வசதிகளான தற்காலிக சிறுநீர் கழிப்பிடம், பெண்களுக்கான உடைமாற்றும் அறை மற்றும் மருத்துவ முகாம் பந்தல் அமைக்கவும் தேவையான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.40,000/- (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியத்தை கருதி விலைப்புள்ளி கோரி, பணி உத்திரவு வழங்கி பணி செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். 12064/2018/இ1 | **தீர்மானம் எண். 671** |
| | **21)** இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள TN.51.U.6995 என்ற எண்ணுள்ள ஈப்பு வாகனத்தின் Engine பழுதடைந்துள்ளதால், வாகனம் இயக்குவதற்கு சிரமமாக உள்ளது. அதனை சீர்செய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.40,000/- (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்). இதனை குடிநீர் திட்ட நிதி 2019-20ல் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். 3041/2019/எச்1 | **தீர்மானம் எண். 672** |
| | **22)** இந்நகராட்சியின் ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் Online மூலம் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு ஆணையர் அவர்களுக்கு DSC card ஒன்று வாங்க வேண்டியுள்ளதால், அதற்காகும் உத்தேச செலவீனத் தொகை ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சியின் பொது நிதி 2019-20 இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். 5528/2019/இ1 | **தீர்மானம் எண். 673** |

| | | |
|---|---|---|
| | **23)** இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை விதிகளின் 2016–ன்படி நகராட்சியில் அனுமதிக்கப்பட்ட துப்புறவு பணியாளர்களில் குறைவாக உள்ள பணியாளர்களுக்கு Out sourcing பணியில் நியமனம் செய்து கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ஒப்புதல் கடிதம் ந.க.எண்.49771/P3/2012, நாள்.13.12.2012–ன்படி அனுமதி அளித்தன்பேரில் நகராட்சியில் 01.11.2018 முதல் 30.11.2019 வரையில் Out sourcing மூலம் சென்னையை சேர்ந்த Saram Enviro services Pvt Ltd நிதி நிறுவனம் துப்புரவு பணிகளை மேற்கொண்டு வருகின்றது. இந்நிலையில் Out sourcing பணி ஒப்பந்த காலம் 30.11.2019 அன்றுடன் முடிவடைவதால் புதியதாக Out sourcing மூலம் பணியாளர்கள் நியமனம் செய்து கொள்வதற்கு உரிய அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு நகர்மன்றம் தீர்மானம் எண்.641 நாள்.27.09.2019 நிறைவேற்றப்பட்டு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.4633/2019/எச்1. நாள்.25.10.2019 மூலம் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி நிர்வாக அனுமதி பெறுவதற்கு உரிய காலதாமதம் ஏற்படும் என்பதாலும் அதுவரையில் நகராட்சியின் பொது சுகாதாரம் பணிகளின் பணிகள் செய்வதற்கு போதிய பணியாளர்கள் இல்லாத நிலையினை கருத்தில் கொண்டு ஏற்கனவே Out sourcing மூலம் பணி செய்து வரும் Saram Enviro services Pvt Ltd சென்னை நிறுவனம் ஏற்கனவே 01.12.2018–ல் அளிக்கப்பட்ட ஊதியம் மற்றும் படிகள் அடிப்படையில் தற்காலிக பணிகள் மேற்கொள்வதற்கு சம்மதம் அளித்திருந்தார்கள். நகராட்சியில் தற்காலிகமாக ஆறு மாத காலத்திற்கு மாவட்ட ஆட்சியரால் கடந்த ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி விகிதங்கள் மற்றும் ESI / PF உள்பட அனைத்து கடந்த ஆண்டு ஒப்பந்த விகித அடிப்படையில் தற்போது பணிகள் மேற்கொள்ளவும், 01.12.2019–முதல் ஆறு மாத காலத்திற்கு மேற்கண்ட ஒப்பந்தத்தினை நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>2. அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார நலன் கருதியும், நிரந்தர துப்புரவு பணியாளர்கள் பற்றாகுறையாக இருப்பதாலும், மேலும் நகராட்சியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மூன்று MCC மையங்களுக்கு கழிவுகளை உரமாக்கும் பணிக்கு தங்குதடையின்றி அனுப்பிடுவதற்கும் பணிகள் தேக்கம் அடையாமல் இருப்பதற்கும் தற்போதைய ஒப்பந்த விலை விகித அடிப்படையில் ஏற்கனவே ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து பணி செய்யும் சென்னையை சேர்ந்த Saram Enviro services Ltd தற்காலிமாக வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.4633/2019/எச்1. | **தீர்மானம் எண். 674** |